# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302*

## விசுவாசிகளின் இரண்டுவித சுபாவங்கள்

**முன்னுரை :**

அநேக புதிய கிறிஸ்தவ விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைநிற்க விரும்பியும் தம் பழைய பாவவாழ்க்கையின் போராட்டங்களையும், பலவீனங்களையும் மேற்கொள்ள முடியாத நிலையில், ஏமாற்றம் அடையும்போது, அதிர்ச்சியும் சோர்வும் அடைகின்றனர்.ஏன்? ஏன் இந்த போராட்டம் முடிவதில்லை?நமக்குள் ஏன் இந்த முடிவில்லா போராட்டம்? நிலையான சமாதானமே கிடைக்காதா? இந்தப் போராட்டத்தில் வெற்றியே கிடைக்காதா? இத்தகைய இடைவிடாத போராட்டத்திற்கான காரணத்தையும், எவ்விதம் ஒரு விசுவாசி வெற்றியையும், சமாதானத்தையும் பெற முடியும் என்பதை அறிவதே இப்பாடத்தின் நோக்கம்.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களின் அதிர்ச்சி தரும் குழப்பங்களையும், இதயத்தை நொறுக்கும் வேதனைகளையும் தவிர்க்க, அவர்களுக்கு விசுவாசியின் இரண்டு இயல்புகளை போதிக்க வேண்டியது அவசியம். பல வருடங்களுக்கு முன்பே இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற கிறிஸ்தவர்களும்கூட இந்த உண்மையைப் புரிந்துகொள்ளத் தவறிவிடுகிறார்கள். இரட்சிப்பின் அனுபவம் பெற்று புதிய சிருஷ்டியாக மாறிவிட்ட ஒருவன் தன் பழைய பாவத்தன்மையை முற்றிலும் இழந்துவிடுவதால் மேற்கொண்டு பாவம் செய்யவே மாட்டான் என்று சிலர் தவறுதலாக உபதேசம் செய்கிறார்கள். இந்த உபதேசம் சிலரை தற்கொலைக்கும், சிலரை மனநோய் மருத்துவமனைக்கும் வழிநடத்துகிறது. அதே சமயத்தில், எல்லா விசுவாசிகளுக்கும் இரண்டு தன்மைகள் உண்டு என்ற தெளிவான, வேதாகம அடிப்படையிலான உபதேசம் யாரையும் பாவம் செய்வதற்கு அனுமதிப்பதில்லை. நாம் காண்கிறபடி வெற்றி நமக்கு கிடைக்கக்கூடியதே. ஆனால் இந்த முக்கியமான உண்மையைப் புரிந்துகொள்ளாத வரையில், கிறிஸ்தவர்கள் தம்மைத்தாமே புரிந்து கொள்வதில்லை. தங்களுடைய போரட்டங்களை புரிந்து கொள்வதில்லை. இடைவிடாத போராட்டத்தைப்பற்றி எச்சரிக்கையுடன் இருப்பதில்லை. பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்படி நடப்பதில்லை. ஆவியானவரின் விடுதலையளிக்கும் வல்லமையைப் பெற்றுக் கொள்வதில்லை. பாவத்திற்கு தாங்கள் மரித்தவர்களாயிருக்க வேண்டுமென்று எண்ணுவதும் இல்லை.

**பாடம்**

## I. எல்லா மனிதரும் விழுந்துபோன பாவ சுபாவம் உடையவர்களாய் பிறக்கின்றனர்

**வீழ்ச்சியின் தோற்றம் :**

1. ஆதியிலே தேவன் முழுமையான உலகத்தையும், பாவமில்லாத மனிதனையும் படைத்தார் (ஆதியாகமம் 1:10,12,18,21,31).
2. தேவன் ஒரு இயந்திர மனிதனை உண்டாக்கவில்லை. ஆதாமையும், ஏவாளையும் தெரிந்தெடுக்கும் திறமை உடையவர்களாய் படைத்தார். அவர்கள் படைத்தவருக்கும், அவரது வார்த்தைக்கும் எதிராக புரட்சி செய்தார்கள் (ஆதியாகமம் 3:1–6).
3. அதன் விளைவாக பாவமும் மரணமும் உலகத்தில் பிரவேசித்தன.
   - அ. ரோமர் 5:12– ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.
   - ஆ. 1 கொரிந்தியர் 15:22 – ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.
4. ஆதாமின் பாவத்தின் விளைவாக மனித இனத்தின் ஒழுங்கு கெட்டு, எல்லா மனிதரும் ஆதாமின் விழுந்துபோன பாவ இயல்பைப் பெற்றார்கள்.
   - அ. ரோமர் 3:23 – "எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி...."

ஆ. ஏசாயா 53:6 – ''நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்.''

இ. ஏசாயா 64:6 – ''நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது'' விதி விலக்கே இல்லை! ரோமர் 3:9–ல் பவுல் கூறுகிறார் – ''யூதர், கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே.''

## II. மனித இயல்பை கடவுள் எவ்வாறு ஆராய்ந்து அறிகிறார் என்பதை வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது.

அ. எரேமியா 17:9 – எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது.

ஆ. ரோமர் 3:9–12 – யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்..... நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

இ. யோபு 15:16 – அநியாயத்தைத் தண்ணீரைப்போலக் குடிக்கிற மனுஷன் எத்தனை அதிகமாய் அருவருப்பும் அசுத்தமுமாயிருக்கிறான்?

ஈ. சங்கீதம் 14:1–3 – . . . . அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள். நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை. . . . . எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்.

உ. எபேசியர் 2:1–3 – அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

## III. பாவம் நிறைந்த மனித இயல்புக்கு வேதாகமத்தில் அடங்கியுள்ள பெயர்கள் :

அ. ஜென்ம சுபாவமான மனுஷன் – 1 கொரிந்தியர் 2:14.

ஆ. மாம்சம் – யோவான் 3:6; ரோமர் 7:25; 13:14.

இ. பழைய மனுஷன் – எபேசியர் 4:22; ரோமர் 6:6; கொலோசெயர் 3:9.

ஈ. ஆதாமின் சுபாவம் – 1 கொரிந்தியர் 15:22; ரோமர் 5:12.

ஆதாமின் சுபாவம் என்று குறிப்பிடப்படாவிட்டாலும் தெளிவாக அதையே குறிக்கிறது.

## IV. விழுந்துபோன மனிதனின் சில திட்டமான குணாதிசயங்களை வேதாகமம் விளக்குகிறது :

அ. ஏமாற்றுதல் : எரேமியா 17:9.

ஆ. கெட்டுப்போதல் : எபேசியர் 4:22; சங்கீதம் 14:1.

இ. ஆதியிலிருந்தே பாவம் நிறைந்த வாழ்க்கை :

1. சங்கீதம் 51:5 – இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். கர்ப்பந்தரித்தல் பாவம் அல்ல; பாவசுபாவத்துடன் நாம் பிறக்கிறோம்.
2. சங்கீதம் 58:3 – துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் பேதலிக்கிறார்கள். தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய் சொல்லி, வழிதப்பிப் போகிறார்கள்.
3. ஆதியாகமம் 8:21 – மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது.

ஈ. மனித சுபாவம் தேவனுக்கு சத்துரு : (ரோமர் 5:10; கொலோசெயர் 1:21; யாக்கோபு 4:4).

உ. ஒன்றுக்கும் பயன்படாமை : யோவான் 6:63; ரோமர் 3:12.

ஊ. மூன்று இயலாத காரியங்கள் :

1. தேவனுக்குக் கீழ்ப்படிய முடியாது (ரோமர் 8:7). ஒருவித புரட்சி நிலை.
2. தேவனைப் பிரியப்படுத்த முடியாது (ரோமர் 8:8). பரிசுத்தமான தேவனை மாம்சம் பிரியப்படுத்த முடியாது.
3. தேவனைப் புரிந்துகொள்ள முடியாது (1 கொரிந்தியர் 2:14). ஆவிக்குரிய காரியங்களில் ஜென்மசுபாவம் குருடாக இருக்கிறது (1 கொரிந்தியர் 2:11).

எ. கடைசியாக, கிறிஸ்து இல்லாத எல்லா மனிதருமே வழிதப்பித் திரிபவர்கள் (ஏசாயா 53:6). ஆக்கினைத்தீர்ப்புக் குட்பட்டவர்கள் (யோவான் 3:18). தேவனுடைய கோபத்திற்கு ஆளானவர்கள் (யோவான் 3:36).

## V. (ஆனால்.... இந்த இடத்தில் நாம் சத்தமாக 'அல்லேலூயா' சொல்ல வேண்டும். ஏனெனில்) எல்லா மனிதருக்கும் புது ஜீவனையும், புது தன்மையையும், ஆவிக்குரிய தன்மையையும் கொடுக்க கிறிஸ்து இவ்வுலகில் வந்தார்.

அ. 2 பேதுரு 1:4 – "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு . . ."

ஆ. திவ்விய சுபாவம் என்பது கிறிஸ்துவின் சுபாவமே.

1. 2 கொரிந்தியர் 5 :17 – ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்.
2. கலாத்தியர் 2:20 – இனி நான் அல்ல; கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.
3. ரோமர் 13:14 – கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தரித்துக்கொள்ளுங்கள்.

இ. எல்லாருக்காகவும் தன்னுடைய ஜீவனைக் கொடுக்கும்படி கிறிஸ்து இவ்வுலகத்தில் வந்தார்.

1. யோவான் 10:10 – நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.
2. 1 யோவான் 5:12 – குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்.
3. எபேசியர் 3:17 – விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் . . .
4. கொலோசெயர் 3:4 – நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது . . .

ஈ. நம்முடைய பழைய பாவம் நிறைந்த மனித சுபாவத்திற்கு மாறாக, நம்மில் இருக்கும் கிறிஸ்துவின் ஜீவன் புதிய மனுஷன் என்று அழைக்கப்படுகிறான்.

1. கொலோசெயர் 3:10 – பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.
2. எபேசியர் 4:24 – மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

உ. எனவே தன்னுடைய பாவங்களை கடவுளிடம் அறிக்கையிட்டு, இயேசுகிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கிற ஒவ்வொரு மனிதனும் முற்றிலும் புதுமையான, ஆவிக்குரிய, திவ்விய சுபாவத்தைப் பெற்றுக்கொள்கிறான். அந்த சுபாவம் பரிசுத்த ஆவியானவரால் ஒவ்வொரு விசுவாசிக்கும் அருளப்படுகிற கிறிஸ்துவின் ஜீவனே ஆகும். இதுவே 'மறுபடியும் பிறப்பது' என்பதன் பொருளாகும் (யோவான் 3:3–8; 1 பேதுரு 1:23).

## VI. மனிதனின் பாவசுபாவத்திற்கும், மறுபிறப்பின் அனுபவத்தால் பெற்றுக்கொள்ளும் தெய்வீக சுபாவத்திற்கும் இடையில் இடைவிடாத போராட்டம் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும் என்பதையே வேதாகமம் கற்பிக்கிறது.

அ. எந்த சூழ்நிலையிலும் மனிதன் தன் பழைய பாவ சுபாவத்தை முற்றிலும் விட்டுவிட முடியும் என்று வேதாகமம் சொல்லவே இல்லை.

1. பரிசுத்தமாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியால் நிறைந்து, ஆவியின் அபிஷேகம் பெற்று, முற்றிலும் தூய்மையாக்கப் பட்ட ஒருவன் தன்னுடைய பழைய சுபாவத்தை முற்றிலும் இழந்துவிடுவான் என்ற உபதேசம் முற்றிலும் பொய்யானது. வேதாகம அடிப்படையின்றி தவறாக வழிநடத்துவது ஒழுங்கின்மையும், அழிவுமானது.
2. மேலும் நம்முடைய பழைய பாவசுபாவங்களை புதுப்பித்து, மெருகூட்டி, திருத்தி அமைக்கமுடியும் என்ற ஆலோசனையும் வேதாகமத்தில் எங்கும் காணப்படவில்லை.
3. நாம் காண்கிறபடி, பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது (ரோமர் 6:6). நீங்களும் விசுவாசத்தினால் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ளுங்கள் (ரோமர் 6:11).

ஆ. தொடர்ந்து கொண்டே இருக்கும் போராட்டத்தை தெளிவாகக் கவனியுங்கள்.

1. (ரோமர் 7:15–25) நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்–நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிற தில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்–நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத

தீமையையே செய்கிறேன்—நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டு என்ற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன்—இந்த வேதப்பகுதி முழுவதையும் கவனமாகவும் ஜெபத்துடனும் வாசித்து உங்கள் சொந்த அனுபவங்களை இப்பகுதி எப்படி விளக்குகிறது என்பதை கவனிக்கவும்.

**குறிப்பு :**

ரோமர் 8:2 வெற்றியின் ஆதாரத்தை வெளிப்படுத்தும்போது, ரோமர் 7—ம் அதிகாரம் ஒவ்வொரு உண்மையான விசுவாசிக்குள்ளும் தொடர்ந்து நடக்கும் போராட்டத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

2. (கலாத்தியர் 5:17) ‘‘மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக் கிறது.’’ ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் முற்றிலும் எதிர்மாறான இரண்டு சுபாவங்கள் ஒன்றோடொன்று எப்போதும் போராடிக்கொண்டே இருக்கின்றன என்பது தான் பிரச்சனை. ஒரு விசுவாசிக்கு வெற்றி உண்டா? உண்மையான சமாதானம் உண்டா? போராட்டத்தை வெற்றி கொள்ள முடியுமா?

## VII. இந்த இடத்தில் நாம் திரும்பவும் சத்தமாக அல்லேலூயா சொல்ல வேண்டும்

அ. இந்த யுத்தத்தில் ஒரு விசுவாசி தனியே விடப்படுவதில்லை. தன்னுடைய நம்பிக்கையை இயேசுகிறிஸ்துவில் வைக்கும் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வந்து தங்கியிருக்கிறார்.

1. யோவான் 14:16,17 2. ரோமர் 8:11,15,16

3. கலாத்தியர் 4:6 4. ரோமர் 8:9

(இந்த வசனங்களை கவனமாக வாசித்தபின் கீழ்வருவனவற்றைப் படிக்கவும்)

ஆ. கிறிஸ்துவில் நாம் பெற்ற புதுவாழ்வை உண்மையாக்கி, பழைய பாவவாழ்க்கையின் பிடியிலிருந்து தம்முடைய வல்லமையால் விடுவிக்கக் கூடியவர் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே.

1. ரோமர் 8:2 – கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.
2. யோவான் 6:63 – ஆவியே உயிர்ப்பிக்கிறது.
3. ரோமர்8:4 – மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.
4. கலாத்தியர் 5:16 – . . . ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

**குறிப்பு :**

பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை தன்னுடைய வாழ்க்கையில் உணர்ந்துகொள்ளும் விசுவாசி அவரது வல்லமையில் தினமும் சார்ந்து வெற்றியுள்ள வாழ்க்கை நடத்துகிறான். சோதனைகள் வரும்பொழுது மாம்சத்தின் இச்சைகளுக்கு அவன் கீழ்ப்படிவதில்லை; மாறாக ஆவியின் ஒன்பது விதமான கனிகள் அவனில் காணப்படும்.

இ. மனித சுபாவத்தின்மீது வெற்றியடைய அதிகப்படியான வல்லமையான வழிகளும் ஆதாரங்களும் உள்ளன.

1. தேவ வார்த்தையின் வல்லமை :

அ. யோவான் 17:17 – உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்.

ஆ. எபேசியர் 5:26 – தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்.

இ. சங்கீதம் 119:9 – வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே.

சங்கீதம் 119:11 – நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். எனவே தேவ வார்த்தையை வாசிப்பதும், படிப்பதும், அதில் மகிழ்ந்து களிகூருவதும் பாவத்தின்மேல் வெற்றியடைய வல்லமையான வழியாகும்.

2. கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமை :

அ. 1 யோவான் 1:7 – இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்

ஆ. எபிரெயர் 10:20 – அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,

இ. வெளிப்படுத்தின விசேஷம் 12:11 – ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அவனை ஜெயித்தார்கள்.

சாத்தானையும், அவனது செயல்களையும் பற்றி இப்போது நாம் படிக்கவில்லை. என்றாலும் நம்முடைய மாம்ச சுபாவத்தில் அவன் செயல்படுவதையும், ஈடுபடுவதையும், அதை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் மேற்கொள்ளமுடியும் என்பதையும் அறிகிறோம்.

3. ஜெபத்தின் வல்லமை :

அ. யாக்கோபு 5:16 – நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

ஆ. பிலிப்பியர் 4:6,7 – ஜெபமானது கவலையையும், மாம்சபிரகாரமான காரியங்களையும் எடுத்துப்போட்டு தேவசமாதானத்தைக் கொண்டுவருகிறது.

இ. யாக்கோபு 4:2 – நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.

ஈ. லூக்கா 18:1 – சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்.

உ. 1 தெசலோனிக்கேயர் 5:17 – இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.

ஊ. ஜெபம் கடவுளின் வல்லமையை வெளிப்படச் செய்கிறது. நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரை ஈடுபடச் செய்கிறது (மத்தேயு 21:22; ரோமர் 8:26,27 – வாசிக்கவும்).

4. கடைசியாக இரண்டு வகையான எண்ணங்கள் இருக்கின்றன :

அ. இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபொழுது நம்முடைய பழைய பாவம் நிறைந்த ஆதாமின் சுபாவமும் அவரோடேகூட சிலுவையில் அறையப்பட்டது. எனவே நாம் பாவத்தைச் சேவிக்க வேண்டியதில்லை (ரோமர் 6:6).

ஆ. நாம் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும், கிறிஸ்து இயேசுவுக்குள் நித்தியஜீவனையும் சுதந்தரித்துக் கொண்டது போலவே, விசுவாசத்தினால் நம்முடைய பழைய சுபாவத்தில் கிறிஸ்துவுக்குள் மரித்து கல்வாரியின் ஆசீர்வாதமான வெற்றிக்குள் நாம் நுழைய முடிகிறது.

ரோமர் 6:11 – நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.

கலாத்தியர் 2:20 – கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்.

கலாத்தியர் 5:24 – கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

<u>**குறிப்பு :**</u>

ரோமர் 6:11–ன்படி 'எண்ணிக்கொள்ளுங்கள்' என்பது, ஒன்றை உண்மை என்று உணர்ந்து, அதன்படி நடந்து, அதில் சார்ந்திருப்பதாகும்.

இ. எனவே நான், என்னுடைய பழைய வாழ்க்கையையும் சுபாவத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள் மரித்ததாகக் கருதி, அவற்றை பழைய அழுக்கான ஆடையைப்போல களைந்துபோட்டு, கிறிஸ்துவில் புதிய ஆடையைத் தரித்துக்கொண்டு, மாம்சத்திற்கானவற்றை ஒழித்துவிட வேண்டும்.

ரோமர் 13:14; எபேசியர் 4:22–24; கொலோசெயர் 3:9,10.

ஈ. ஆனால் இவையெல்லாமே எதிர்மாறான எண்ணமே ஆகும். சரியானபடி 'தேவனுக்கென்று பிழைத்திருக் கிறவர்களாக எண்ணிக்கொள்ளுங்கள்' என்பதற்கு நாமே பொறுப்பு (ரோமர் 6:11).

<u>**குறிப்பு :**</u>

நான் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்பட்டேன் (எபேசியர் 2:1). விசுவாசத்தினாலே தேவனுக்குள் பிழைத்திருக்கிறவர் களாக எண்ணிக்கொண்டு–தேவனைப் பற்றிய உணர்வோடு தேவனே நமக்கு எல்லாவற்றையும் நம் மூலமாக செய்ய வல்லவர் என்று அவருக்குள் உறுதியாக இருக்க வேண்டும்.

உ. இந்த இரண்டுவிதமான எண்ணங்களின் விளைவாக நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் பலன்கள் :

அ. கடவுளின் பிரசன்னம் இடைவிடாமல் இருப்பதை அறியலாம்.

ஆ. கிறிஸ்துவின் வல்லமையும், வாழ்க்கையும், நம்மிடையே தொடர்ந்து கிரியை செய்வதையும்,

இ. நம்மில் பரிசுத்த ஆவியானவரின் நிலையான வல்லமையான ஈடுபாட்டின் விளைவாக பாவம் மரணம் என்ற பிரமாணத்தினின்று நாம் விடுதலையாவதையும் உணரலாம்.

**முடிவுரை :**

எப்பேர்ப்பட்ட கிறிஸ்தவனும் அவனுக்குள் இருக்கும் போராட்டத்திலிருந்து முழுவதும் விடுதலை அடைவதில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் சுத்திகரித்து, நம்மை தேவ சமுகத்திற்குள் கொண்டு செல்லும். நமக்குள் இருக்கும் தேவனின் வல்லமையை வெளிக்கொண்டுவரத்தக்கதாக நாம் ஆவியில் ஜெபிக்கிறோம்.

நம்மைப் பரிசுத்தப்படுத்தும் தேவனுடைய வார்த்தையை நாம் வாசித்து, அதைத் தியானிக்கிறோம். விசுவாசத்தினாலே நம்முடைய பழைய பாவ மனுஷன் கிறிஸ்துவுடன் மரித்துவிட்டதாக நாம் எண்ணுகிறோம் நாம் ஆவியானவரின் வழியிலே நடக்கிறோம். எனவே ஆசீர்வதிக்கப்பட்ட வெற்றியை சுதந்தரித்துக்கொள்ளாமல் போக்குச்சொல்ல நமக்கு இடமில்லை.

போராட்டத்தில் வெற்றி அடைந்தாயிற்று. சமாதானமும், சந்தோஷமும் நீங்கள் சுதந்தரிப்பதற்காகவே. நம்முடைய பாவங்களுக்காக மட்டுமல்ல; நம்முடைய பாவ சுபாவங்களுக்காகவும் கிறிஸ்து மரித்தார்.

வெற்றியான வாழ்க்கை நடத்துங்கள். ரோமர் 12:1 – ஜீவபலியாக மாறுங்கள். இடைவிடாமல் ஜெபியுங்கள். ஆவியானவரின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுங்கள் உயிர்த்தெழுந்த வாழ்வின் வல்லமையை தரித்துக்கொள்ளுங்கள் (ரோமர் 6:4). கிறிஸ்துவில் உங்கள் உடைமைகளைச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். தேவனுக்குள் ஜீவனுள்ளவர்களாயிருங்கள். பவுலுடனேகூடச் சேர்ந்து ‘‘நான் அல்ல, கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார்’’ (கலாத்தியர் 2:20) என்று சொல்லுங்கள்.

<u>குறிப்பு :</u>

தேவன் இந்தப் பாடத்தை ஆவியானவரால் அபிஷேகித்து, இதை உங்களுக்கு ஒரு சிறந்த ஆசீர்வாதமாக மாற்றும்படியாக ஜெபிக்கிறேன்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# விசுவாசிகளின் இரண்டுவித சுபாவங்கள்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. விசுவாசியின் இரண்டு சுபாவங்களை புதிதாக இரட்சிக்கப்பட்டவர்கள் அறிந்துகொள்வது அவசியம் ஏன் ?
   a. ஒரு போதும் பாவம் செய்ய மாட்டார்கள்
   b. இரட்சிக்கப்பட்ட பின் பாவத்தில் விழ நேரிட்டால் குழப்பம் அடையாதிருக்க
   c. தவறான அறிக்கை செய்ய மாட்டார்கள்
2. தேவன் ஆதாமையும் ஏவாளையும் படைத்தபொழுது :
   a. அவர்கள் பாவமில்லாமல் பரிபூரணமாக இருந்தனர்
   b. தேவன் சொல்வதைச் செய்யும் இயந்திர மனிதர்களாக இருந்தனர்
   c. அவர்கள் பாவிகளாக இருந்தனர்
3. மனிதனின் பாவத்தின் விளைவுகளில் ஒன்று :
   a. தேவதூதர்கள் அவர்களைக் கொலை செய்தனர்
   b. தேவன் அவர்களை மன்னித்து, தோட்டத்தில் இருக்கும்படி செய்தார்
   c. அவர்களையும், மனுக்குலத்தையும் மரணம் ஆட்கொண்டது
4. ஆதாமின் பாவம், பாவத்தன்மையைக் கொண்டு வந்தது, இதை நிரூபிக்கும் வசனத்தைக் குறிக்கவும்.
   a. ஆதியாகமம் 1:10
   b. ரோமர் 3:9–12
   c. கலாத்தியர் 5:16
5. பாவியான மனிதன் எப்படிப்பட்டவனாக இருக்கிறான் ?
   a. தேவனைப் பிரியப்படுத்தக் கூடாதவனாயிருக்கிறான்
   b. பிறர்க்கு உதவு செய்ய முடியாதவனாயிருக்கிறான்
   c. நல்ல சபைக்குப் போக முடியாதவனாயிருக்கிறான்
6. கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத அனைவரும் எப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றனர் ?
   a. இரட்சிக்கப்பட்டிருக்கின்றனர்
   b. வழிதப்பித் திரிபவர்கள்
   c. கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர்
7. ஒரு விசுவாசி தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவராக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் வசனம் எது ?
   a. கலாத்தியர் 2:20
   b. யோவான் 10:10
   c. 2 பேதுரு 1:4

8. கிறிஸ்து விசுவாசிக்கு புதிய ஜீவனைக் கொடுத்திருக்கிறார் என்பதைக் காண்பிக்கும் வசனம் எது ?

    a. 2 பேதுரு 1:4

    b. 1 யோவான் 5:11,12

    c. கலாத்தியர் 2:20

9. கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் புதிய வாழ்வு, 'புதிய மனுஷன்' என்று அழைப்பதற்கான வேத வசனம் எது ?

    a. எபேசியர் 4:24

    b. 1 யோவான் 5:12

    c. கலாத்தியர் 2:20

10. பழைய சுபாவத்திற்கும் புதிய சுபாவத்திற்கும் உள்ள போராட்டம் எதுவரைக்கும் தொடரும் ?

    a. ஒரு விசுவாசி பாவம் இல்லாத நிலையை அடையும் வரைக்கும்

    b. ஒரு விசுவாசி மகிமையான சரீரத்தைப் பெறும் வரைக்கும்

    c. ஒரு விசுவாசி தேவனுக்குக் கீழ்ப்படிய கற்றுக்கொள்ளும் வரைக்கும்

11. இயேசுகிறிஸ்துவின்மேல் தன் நம்பிக்கையை வைக்கும் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்பதைக் காண்பிக்கும் வசனம் எது ? **(இரண்டை வட்டமிடவும்)**

    a. யோவான் 14:16,17

    b. ரோமர் 7:15

    c. ரோமர் 8:11,5,16

    d. கலாத்தியர் 5:17

12. பழைய பாவ வாழ்க்கையின் பிடியிலிருந்து தம்முடைய வல்லமையால் விடுவிக்கக்கூடியவர் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே என்பதைக் காட்டும் வசனம் எது ?

    a. கலாத்தியர் 5:17

    b. ரோமர் 8:4

    c. ரோமர் 7:15

13. விசுவாசியின் வாழ்க்கையில் வேத வசனத்தின் வல்லமையைக்குறித்துச் சொல்லும் வசனம் எது ?

    a. ரோமர் 8:9

    b. கலாத்தியர் 5:16

    c. சங்கீதம் 119:9,11

14. விசுவாசியின் வாழ்க்கையில் ஜெபத்தின் வல்லமையைக்குறித்துச் சொல்லும் வசனம் எது ?

    a. 1 யோவான் 3:1

    b. பிலிப்பியர் 4:6,7

    c. கலாத்தியர் 2:20

15. ஒரு விசுவாசியாகிய நான் தேவனுக்குப் பிழைத்திருக்கிறவனாக எண்ணிக்கொள்ள வேண்டும், இதனின் பொருள் என்ன ?

a. தேவன் என்னிலும், என் மூலமாகச் செய்ய விரும்பும் காரியங்களைக் குறித்து கவனமுள்ளவனாக இருக்க வேண்டும்

b. எனக்குள் ஒரு போராட்டம் இருக்கிறது என்பதை அறிந்திருக்க வேண்டும்

c. தேவன் என்னை சிறப்பாக ஆசீர்வதிக்கும்படி கேட்க வேண்டும்

16. **பொருத்துக :–** மனிதனின் பாவ சுபாவத்தைக் குறிக்கும் வேதாகமப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. (சரியான பெயர்களோடு வேதவசனத்தை எழுதவும்)

| | | |
|---|---|---|
| ––––––––––––––––––– | ஜென்ம சுபாவம் | a. எபேசியர் 4:22 |
| ––––––––––––––––––– | மாம்சம் | b. ரோமர் 13:14 |
| ––––––––––––––––––– | பழைய மனுஷன் | c. 1 கொரிந்தியர் 2:14 |
| ––––––––––––––––––– | ஆதாமின் சுபாவம் | d. ரோமர் 13:14 |

17. **பொருத்துக :–** கீழே உள்ள வசனங்களில் நாம் காணும் மனித சுபாவத்தின் தன்மை என்ன ? (சரியான பெயர்களோடு வேதவசனத்தை எழுதவும்)

| | | |
|---|---|---|
| ––––––––––––––––––– | கெட்டுப்போகுதல் | a. ரோமர் 3:12 |
| ––––––––––––––––––– | பிரயோஜனமற்றது | b. எபேசியர் 4:22 |
| ––––––––––––––––––– | தேவனுக்குச் சத்துரு | c. எரேமியா 17:9 |
| ––––––––––––––––––– | ஆதிமுதல் பாவம் | d. ரோமர் 5:10 |
| ––––––––––––––––––– | ஏமாற்றுதல் | e. சங்கீதம் 51:5 |

18. கீழே உள்ள வசனங்கள் மனிதத் தன்மையைக் குறித்து என்ன சொல்லுகிறது ?

எரேமியா 17:9 ––––––––––––––––––––––––––––––––––––––––––––

சங்கீதம் 14:3 ––––––––––––––––––––––––––––––––––––––––––––

ஏசாயா 53:6 ––––––––––––––––––––––––––––––––––––––––––––

ரோமர் 3:9 ––––––––––––––––––––––––––––––––––––––––––––

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________